இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 12-05-2025

# தேசம் காக்கும் களத்திலும்

இந்திய ராணுவத்துக்கு துணை நிற்போம் என்ற மகத்தான பேரணியைத் தமிழ்நாட்டில் ஒருங்கிணைத்தும் இந்தியாவுக்கு வழிகாட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மாணவ – மாணவியர், இளைஞர்கள், காவலர்கள், முன்னாள் ராணுவத்தினர், அரசியல் கட்சித் தலைவர்கள் என அனைவரையும் கடற்கரை சாலையில் அணி வகுக்க வைத்தும், அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றும் முதலமைச்சர் காட்டிய தார்மீக ஆதரவு என்பது இந்தியாவுக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது.

அரசியல் களத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக சரிக்குச் சரியாக நிற்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அதேநேரத்தில் இந்தியாவில் தீவிரவாதத்தை ஒழிக்கவும், இந்திய எல்லையைக் காக்கவும் ஒரு போர் தொடுக்கப்படு மானால், அந்த நேரத்தில் பா.ஜ.க.வுக்கு துணையாக நிற்போம் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி விட்டார்கள்.

முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் பயணம் செய்த ஹெலிகாப்டர் விபத்திற்குள்ளான செய்தி அறிந்ததும், தன்னுடைய அனைத்துப் பணிகளையும் ஒத்தி வைத்து விட்டு குன்னூர் பறந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அதுதான் உண்மையான தேசபக்தி. அப்படித்தான் இந்தப் பிரச்சினையிலும் முதலமைச்சர் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை மே 7 முதல் இந்திய ராணுவம் தொடங்கியது. **“இந்திய ராணுவத்தின் துணிச்சலையும் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றுவதற்கும், தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் பேரணி நடத்தப்படும்”** என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

சிலருக்கு இது அதிர்ச்சியாகவும், சிலருக்கு இது ஆச்சரியமாகவும் இருந்தது. இதில் அதிர்ச்சி அடையவும், ஆச்சரியப்படவும் ஏதுமில்லை. தேசம் காக்கும் களத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் உறுதியாக இருந்துள்ளது.

சீனப்படையெடுப்பு நடந்த காலத்தில்தான், நாட்டு நன்மைக்காக ‘திராவிட நாடு’ கோரிக்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுக் கொடுத்தார்கள். 1962 விலைவாசி உயர்வு போராட்டத்தில் கலந்து கொண்டு வேலூர் சிறையில் அப்போது இருந்தார் அண்ணா. 1962 ஆகஸ்ட் 3 அன்று டெல்லியில் நடைபெறும் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அண்ணாவுக்கு அழைப்பு அனுப்பினார் பிரதமர் நேரு. வர இயலவில்லை என்று அண்ணா பதில் அனுப்பினார். சீனப் படையெடுப்பு குறித்து பேசவே நேரு அழைப்பு விடுத்தார். **‘நிலைமைகளை எளிதாக்கத் தகுந்த வழிமுறைகளைக் கையாளும் உங்கள் திறமையில் எனக்குள்ள நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொள்கிறேன்’** என்று அக்கடிதத்தில் அண்ணா குறிப்பிட்டார். செப்டம்பர் 29,30 சேலத்தில் கூடிய தி.மு.க. பொதுக்குழு சீன ஆக்கிரமிப்பை கண்டித்து தீர்மானம் இயற்றியது. இந்த நேரத்தில் இந்திய அரசுக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று கூறியது.

1962 அக்டோபர் 2 இந்தியாவின் வடமேற்கு லடாக், வடகிழக்கு நேபாள பகுதிக்குள் சீன ராணுவம் நுழைந்தது. சிறையில் இருந்து விடுதலையான அண்ணா அவர்கள், **“சீனாவின் ஆக்கிரமிப்பை ஏற்க முடியாது, சீனா பின் வாங்கும் வரை பிரதமர் நேருவின் கரத்தை வலுப்படுத்துவோம்”** என்று அறிவித்தார்.

நாடு காக்கும் பணி நமதென்றே நாமிருப்போம் என்று பேசினார். **“சீனர்களின் ஆக்கிரமிப்பை நாம் ஒரு போதும் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம். ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள சீனர்களின் காலடி திருப்பி எடுக்கப்படும் வரை திராவிட முன்னேற்றக் கழகம் நேருவின் கரத்தை பலப்படுத்தும். டெல்லியில் இருப்பவனையே நமக்குப் பிடிக்கவில்லை என்றால் எங்கோ பீகிங்கில் இருப்பவனையா நமக்குப் பிடிக்கும்? எதிரிகளிடம் இருந்து முதலில் நாட்டை மீட்ட பிறகு தான் நாட்டுப் பிரிவினையே தவிர எல்லையில் எதிரிகளை நுழைய விட்டா பிரிவினை என்று பேசிக் கொண்டிருக்க முடியும்?”** என்றார் அண்ணா. சென்னை கடற்கரையில் பேசிய அண்ணா, **“வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும். இப்போது வீட்டுக்கே அல்லவா ஆபத்து வந்திருக்கிறது?”** என்று கேட்டார்.

தி.மு.க. பொருளாளர் கலைஞர் முன்னிலையில் சீன ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் நிதி திரட்டப்பட்டது. ஒரே நாளில் 35 ஆயிரம் ரூபாய் திரண்டது. அதனை முதல்வர் காமராசரிடம் நாவலர் நெடுஞ்செழியன் வழங்கினார். இவை எல்லாம் அழிக்க முடியாத வரலாறு ஆகும்.

இதே வழித்தடத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்களும் செயல்பட்டார்கள்.1971 ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் போர் நடந்த போதும் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிதான் நடந்து கொண்டு இருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தார்கள். போர் தொடங்கிய போது அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகள் பங்கெடுப்பதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்றிருந்தார்கள். போர் தொடங்கியது என்பதைக் கேள்விப்பட்டதும் உடனடியாக தமிழ்நாடு திரும்பினார்கள். கலைவாணர் அரங்கில் அவருக்கு வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வரவேற்பு விழா என்ற பெயரை மாற்றி, **‘பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டம்’** என்று போட்டு நடத்தச் சொன்னார்கள். பாகிஸ்தான் படையெடுப்புக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறுகோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதல்வர் கலைஞர்அவர்கள். அன்றைய தினம் அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் ரூ.25 கோடி. அதில்

ரூ.6 கோடியை வழங்கியது தி.மு.க. அரசு. அந்தப் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு கலைஞரின் அரசு.

1999 ஆம் ஆண்டு கார்கில் போரின் போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு முதல்வர் கலைஞரின் அரசு.

**பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் வழியில் தேசம் காக்கும் களத்திலும் முன்னணித் தளபதியாக நிற்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

## தருமபுரியில் கலந்துரையாடல் கூட்டம்!

தருமபுரி, மே 12–

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல் மற்றும் சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை உயர்த்துவது குறித்து கரும்பு விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள், கரும்பு விவசாய அங்கத்தினர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் 09.05.2025 அன்று நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஸ், சர்க்கரைத் துறை இயக்குநர் டி.அன்பழகன், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் வீ.இரவி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம்.பெ.சுப்பிரமணி, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. காய்த்ரி, பாலக்கோடு பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும்

# அன்னையர் அனைவர்க்கும் வாழ்த்துக்கள்!

## அன்னையர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, மே 12 –

‘அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும் அன்னையர் அனைவர்க்கும் அன்னையர் தின வாழ்த்துக்கள்’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னையர் தினத்தையொட்டி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

அன்னையர் தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மண்ணுலகின் உயிர்களை எல்லாம் தன்னிலிருந்து ஈன்றெடுத்து, அன்பினால் அரவணைத்து, தாய்மொழியூட்டி, அறிவூட்டி, ஆளாக்கி, அவனியின் ஆதார சுருதியாய்த் திகழும் அன்னையர் அனைவருக்கும் அன்னையர் தின வாழ்த்துகள்!**



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ‘தென் இந்தியாவின் கேம்பிரிட்ச்’ என அழைக்கப்படும்

# கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் - கல்லூரி நுழைவு வாயில்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்! அமைச்சர் கோவி.செழியன் முன்னிலை!

தஞ்சாவூர், மே.12 -

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் (தன்னாட்சி) பொதுப் பணித் துறை, தொழில்நுட்பக் கல்வி சார்பில் புதுப்பிக்கப் பட்ட கல்லூரி நுழைவு வாயில், காவிரி நடைபாலம் மற்றும் மிதிவண்டி நிறுத்துமிடத்தினை சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலர் சி.சமயமூர்த்தி, கல்லூரிக் கல்வி இயக்ககம் ஆணையர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா. பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர்கள் மு.சண்முகம், செல்வி.ஆர்.சுதா (மயிலாடுதுறை), ச.முரசொலி (தஞ்சாவூர்) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. அன்பழகன், டி.கே.ஜி. நீலமேகம், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க. சரவணன், மாநகராட்சி துணை மேயர்கள் சுப.தமிழழகன் (கும்பகோணம்), மரு. அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், கும்ப கோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ். விஜயன், பொதுப்பணித் துறை தொழில்நுட்பக் கல்வி வட்டம் தலைமை பொறியாளர் வி.சுகுமாரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஆர். சச்சிதானந்தம், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் து.ரோசி, கல்லூரி முதல்வர் முனைவர் அ.மாதவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் (தன்னாட்சி) முத்தமிழறிஞர் கலைஞர் படத்திறப்பு விழா மற்றும் பொதுப் பணித்துறை, தொழில் நுட்பக் கல்வி சார்பில் புதுப்பிக்கப்பட்ட கல்லூரி நுழைவு வாயில் காவிரி நடைபாலம் மற்றும் மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை திறக்கப்பட் டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டு தலின்படி, தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் 32 தொழில்பூங்கா, 28 தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது. 17.97 லட்சம் சிறு, குறு தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளைத் தேடி பல கோடி பேர் வெளிமாநிலத்தில் இருந்து வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் போன்ற பல்வேறு திட்டங்களை வழிவகுத்த தன் மூலம் பல லட்சம் மாணாக்கர்கள் பயன் பெற்றுள்ளனர் என சட்ட மன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்கள்.

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் படத்திறப்பு விழா மற்றும் புதுப்பிக்கப்பட்ட பால வழிப்பாதை திறப்பு விழா சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் இனிதே நடைபெற்றது. இக்கல்லூரியானது 171வது ஆண்டில் கல்விப் பணியாற்றி தென்னிந்திய கேம்பிரிட்ஜ் எனப் போற்றப் படுகிறது.

இக்கல்லூரியில் பயின்ற கணிதமேதை இராமானுஜம் முடிவிலியைப் பற்றி முழுமையாக விளக்கி கணிதத் துறைக்கும், இன்றைய கணினி துறைக்கும் பெரும் பங்காற்றி இக்கல்லூரிக்கு நிரந்தர பெருமை சேர்த்துள்ளார்.

இக்கல்லூரியில் பயின்ற ‘வெள்ளிநாக்கு வேந்தர்’ வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி தமது ஆங்கிலப் புலமையில் சிறப்பு பெற்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்த ராகப் பணியாற்றி இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இக்கல்லூரியில் பணியாற்றிய உ.வே.சாமிநாத அய்யர் சங்க இலக்கிய ஓலைச்சுவடிகளைச் சேர்த்து தமிழுக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் பெருமை சேர்த்து தொண்டாற்றியுள்ளார். இக்கல்லூரியில் பயின்ற எஸ். ஜானகிராமன் இந்திய ரிசர்வ் வங்கியின் துணை நிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் கு.ப.ராஜகோபால் இக்கல்லூரியில் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் சாகித்ய அகாடமி பரிசுப் பெற்ற இந்திரா சௌந்தர ராஜன், இந்திரா பார்த்த சாரதி, தி.ஜானகிராமன், புதுமைப்பித்தன், கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கு.வெ. பாலசுப்ரமணியன் ஆகிய எழுத்தாளர்கள் இக்கல்லூரியில் பயின்று பெருமை சேர்த்துள்ளனர்.

வேளான் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன், சிறந்த சிந்தனை எழுத்தாளர் எம்.எஸ்.உதயமூர்த்தி ஆகியோர் இக்கல்லூரியில் பயின்று பெருமை சேர்த்துள்ளனர். இதுபோன்று பல்வேறு பெருமைகள் இக்கல்லூரி பெற்றுள்ளது. நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம், காலை உணவுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் கல்வியின் முக்கியத்துவம் அறிந்து முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதன் மூலம் தமிழ்நாட்டில் கல்வி பயின்றோர் சதவீதம் அதிக ரித்துள்ளது. எனவே, மாணாக்கர்கள் கல்வி பயின்று வாழ்க்கையில் உயர வேண்டும் என உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

முன்னதாக சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் கும்ப கோணம் அரசினர் கலைக் கல்லூரியில் (தன்னாட்சி) வளாகத்தில் அமைந்துள்ள கணித மேதை இராமானுஜர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து, புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்பாடம் தயாரிப்பு அறையினையும் (EContent Developing Centre), மாணவியர்களின் ஒய்வு அறையையும் திறந்து வைத்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் சட்டமன்ற பேரவையில் கும்ப கோணத்தில் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, கும்ப கோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பல்கலைக் கழகம் அமைப்பது தொடர்பாக இடம் தேர்வு செய்வது குறித்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

### இராணிப்பேட்டை – சோளிங்கர் ஒன்றியத்தில்

# கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி – முன்னணியினர் சிறப்புரை!

இராணிப்பேட்டை, மே 12-

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நான்காண்டு கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் பானாவரம் கூட்ரோடு பாண்டியநல்லூர் நடைபெற்றது.

இதில் தலைமை - எஸ். என். பூர்ணசந்தர் ஒன்றியச் செயலாளர். வரவேற்புரை - ஆர்.பழனி கிளைக் கழக செயலாளர். இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பேசினார்.

இதில் 12 வகுப்பு தேர்வில் மாவட்டத்தில் 3 வது இடம் பிடித்த ரெண்டாடி கிராமத்தை சேர்ந்த ஜாஸ்மீன் த/பெ பூபதி என்பவரை சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இதில் ஒன்றிய நிர்வாகிகள் லோகநாதன், மணி, நதியா, வெங்கடேசன், கர்ணாமூர்த்தி, புருஷோத்தமன், பூபாலன், பார்த்திபன், சிவக்குமார் மற்றும் நாத்திகம் நாகராஜன், தலைமை கழக பேச்சாளர் கலந்து கொண்டு பேசினார்.

இதில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் - மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சிக் குழு துணை தலைவர் எஸ்.எம்.நாகராஜீ, ஒன்றிய குழு தலைவர் அ. கலைக்குமார், மாவட்ட அவை தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ. அசோகன், உ.சீனிவாசன், தலைமைக் கழக பேச்சாளர் ஒன்றிய குழு துணை தலைவர் பூங்கொடி ஆனந்தன், ஒன்றிய செயலாளர் டி. கிருஷ்ண மூர்த்தி, முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.எம். சந்திரன், நகர செயலாளர் எம்.கோபி, முன்னாள் நகர செயலாளர் ஏ. ராஜேந்திரன், மா.வ.து. அமைப்பாளர் எஸ்.என். உதயகுமார், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் கவிதா கலைகுமார், மா. ம தொ.அ. கல்பனா நடராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வி. விவேக், மு.ஒன்றிய செயலாளர் கொடைக்கல் சேகர், ஒன்றிய குழு உறுப்பினர்கள் நதியா மதன் குமார், சுகந்தி முருகேசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் திருமலை சுப்பிரமணி, சுதா பாபு, அந்தோனி, அனிதா ஸ்டீபன், ஒன்றிய மாணவர் அணி எபிநேசர், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன், தொமுச தங்கதுரை, மு.ஊராட்சி தலைவர் நாகராஜவர்மா, துணைச் செயலாளர் தணிகை பெருமாள், சுற்றுச் சூழல் அணி யாஸ்மின், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

இதில் இறுதியாக கிளைக் கழகச் செயலாளர் ஜெயமணிகண்டன் நன்றி கூறினார்.



ஆத்தூர் தொகுதியில் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியினரின் செயல்பாடுகள் குறித்த விவரங்களை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் தொகுதி பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி வழங்கினார். தமிழக முதல்வரின் சாதனை திட்டங்கள், துணை முதல்வரின் செயல்பாடுகள், ஆத்தூர் தொகுதியில் நடைபெறும் நலத்திட்டங்கள் குறித்து தினசரி 23 ஆயிரம் பேர் வாட்ஸ்அப் மூலம் தெரிந்து கொள்ளும் வண்ணம் தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்களை குழுவில் இணைத்துள்ளதற்கு தொகுதி பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணியை அமைச்சர் பாராட்டினார். உடன் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.